DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,

POLLACHI

| | |
|---|---|
| Calendar | CC.141/2013 |
| Miscellaneous | |
| Preliminary Register | Case No. of |
| Sessions | |
| | Prosecution அ.சா.2 |
| Deposition of Witnesses for | Defense |
| | Court : |
| Name | : சிதம்பரம், த.கா. 2465 திருச்சி மாநகரம் கண்டோமென்ட் காவல் நிலையம் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது திருச்சி மாநகரம் கண்டோமென்ட் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். நான் கோவை வீடியோ தடுப்பு பிரிவு காவல் நிலையத்தில் 16.11.2012 அன்று பணிபுரிந்தபோது மேற்படி காவல் நிலையத்தின் ஆய்வாளர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமியும் நானும் கோவை

வீடியோ தடுப்பு பிரிவு சம்பந்தமாக சோதனை செய்வதற்காக முகாமிட்டிருந்தபோது சுமார் 11.30 மணியளவில் முகாமில் அகமது பாஷா என்பவர் எழுத்து மூலமாக கொடுத்த புகாரை பெற்று காவல் ஆய்வாளர் புகாரைப்பெற்று விசாரித்தபோது பொள்ளாச்சி பகுதியில் திருட்டு வீடியோ குறுந்தகடுகள் புழக்கத்தில் இருப்பதாகவும் அது சம்பந்தமாக பேருந்து நிலையங்களில் கண்காணிப்பு செய்தால் முகமதுஅலி (எ) அலிபாய் மேற்படி புதுப்பட கேசட்டுகளை வைத்திருப்பது தெரியும் என கிடைத்த தகவலின் பேரில் பேரூந்து நிலையத்தில் கண்காணித்தபோது இரண்டு அட்டைபெட்டிகளுடன் நின்றுகொண்டிருந்தவரை மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் விசாரணை செய்தபோது அதில் புதுப்பட கேசட்டுகள் இருந்தது. மேற்படி புதுப்பட கேசட்டுகளுக்கு காப்புரிமை உள்ளதா என்று விசாரித்தபோது காப்புரிமை இல்லை என்று தெரிவித்ததின் அடிப்படையில் மேற்படி நபரின் பெயர், விலாசம் கேட்டதில் மேற்படி நபர் முகமது அலி (எ) அலிபாய் என்பதும் தெரியவந்தது. அவரை மதியம் சுமார் 01.00 மணியளவில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமியும் சாட்சிகளாக கையொப்பமிட்டோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அசாஆ 2 / அ.சா. 2** ஆகும். அதே இடத்தில் மேற்படி அட்டைபெட்டியில் உள்ள சி.டி-களை கைப்பற்றி மகஜர் தயார் செய்ததில் துப்பாக்கி படக்கேசட்டுகள் 50, மாற்றான் படக்கேசட்டுகள் 150, முகமுடி படம் 250 கேசட்டுகள், சாருலதா படக்கேசட்டுகள் 325, எம்.பி 3 கேசட்டுகள் 275, ஆபாச படங்கள் 125 ஆக மொத்தம் 1325 கேசட்டுகளை மகஜரில் கைப்பற்றினார். அதில் சாட்சிகளாக நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமியும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் **அசாஆ 3 / அ.சா. 2** ஆகும். மேலும் காவல் ஆய்வாளர் அவரை விசாரித்தபோது அவர் தன்னை அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்றால் வீட்டில் உள்ள காப்புரிமை இல்லாத கேசட்டுகள் மற்றும் அதை தயாரிக்கும் மெஷின் மற்றும் சி.டி, டி.வி.டி-க்களை ஒப்படைப்பதாக கூறினார்.

16.11.2012 அன்று சுமார் 14.30 மணியளவில் மேற்படி எதிரியின் வீட்டிற்கு நாங்கள் சென்று பார்த்தோம். என்னுடன் காவல் ஆய்வாளர். சண்முகையா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமி, திருட்டு வீடியோ தடுப்பு பிரிவு, கோவை அவர்களுடன் சம்பந்தப்பட்ட எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அவரது வீட்டில் இருந்து காப்பிரைட் மெஷின் 1, புதுப்புது திரைப்பட சி.டி. 1550 ஆகியவற்றை என் முன்னிலையிலும் சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமி முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னடையது. அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் **அசாஆ 4/அ.சா. 2** ஆகும். ஆக மொத்தம் 5975 சி.டி-களை கைப்பற்றி படிவம் எண் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். 1325 சிடி-களை கொண்ட படிவம் எண் 91 **அசாஆ 5/அ.சா. 2** ஆகவும், **4650** சிடி-களை கொண்ட படிவம் எண் 91 **அசாஆ 6/அ.சா.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இது சம்பந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் கோவை வீடியோ தடுப்பு பிரிவில் எத்தனை ஆண்டுகளாக பணியாற்றி வந்தேன் என்றால் 2 ஆண்டுகாளக பணியாற்றி வந்தேன். நாங்கள் கோவையில் இருந்து சம்பவத்தன்று எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் நினைவில்லை. ஆனால் 10.00 மணிக்கு பொள்ளாச்சி வந்துவிட்டோம். பொள்ளாச்சி பேருந்து நிலையம் வந்தவுடன் எத்தனை மணிக்கு அ.சா 1 எங்களிடம் வந்தார் என்றால் 11.30 மணிக்கு வந்தார். இடைப்பட்ட 1 ½ மணி நேரம் நாங்கள் எங்கிருந்தோம் என்றால் பேருந்து நிலையம் அருகேதான் இருந்தோம் . அ.சா 1 எந்த ஊரைச் சேர்ந்தவர் எங்கு வசித்து வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுக்கும்போது நான் நேரில் பார்த்தேன். மேற்படி புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அதில் என்ன உள்ளது என்று தெரியுமா

என்றால் தெரியாது. நாங்கள் எந்த பேருந்து நிலையத்தின் அருகே இருந்தோம் என்றால் எனக்கு மேற்படி பேருந்து நிலையத்தை குறிப்பிட்டு சொல்லத் தெரியாது. பொள்ளாச்சி பேருந்து நிலையத்தில் புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எதிரியை அடையாளம் காண்பித்தாரா என்றால் இல்லை. அ.சா.1 புகார் கொடுத்த எவ்வளவு நேரத்தில் புறப்பட்டுச் சென்றார் என்றால் சுமார் ½ மணி நேரத்தில் சென்றுவிட்டார். அ.சா.1 ஐ காவல் ஆய்வாளர் விசாரித்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அ.சா.1-ன் ஊர், பெயர் குறித்து விசாரித்தாரா என்றால் விசாரித்தார் .ஆனால் எனக்கு ஊர் ஞாபகம் இல்லை. நான்கூறுவதுபோன்று வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பேருந்து நிலையத்தின் அருகில் நின்றுகொண்டிருந்த இடத்தின் சுற்றுப்புறம் குறித்து நான் கவனத்தில்கொள்ளவில்லை அது குறித்து ஞாபகம் இல்லை. மேற்படி அசாஅ 1 டம் இருந்து காவல் ஆய்வாளர் புகார் பெற்ற இடம் பேருந்து நிலையத்தில் இருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ளது. அ.சா. 1 கொடுத்த தகவலின்படி பேருந்து நிலையத்தில் நாங்கள் சோதனைக்காக இருந்தோம். அப்போது மதியம் 01.00 மணிக்கு எதிரி 2 அட்டைபெட்டிகளுடன் பேருந்து நிலையத்திற்குள் வந்தார். அந்த அட்டைபெட்டிகளை சோதனைக்காக ஆய்வாளர் உட்படுத்தினார். மேற்படி இரண்டு அட்டைபெட்டிகளை எதிரி எங்கிருந்துகொண்டுவந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் பார்த்தபோது எதிரி மேற்படி சி.டி-களை யாரிடமாவது விற்பனை செய்தாரா என்றால் இல்லை. நாங்கள் பேருந்து நிலையத்தில் சம்பவத்தன்று மதியம் சுமார் 02.00 மணி வரை இருந்தோம். மேற்படி நேரத்திற்குள் எதிரியிடம் உள்ள சி டி-கள் எத்தனை என்று தெரிந்துகொண்டோமா என்றால் தெரிந்துகொண்டோம். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சி.டி-கள் இயக்கி பார்க்கப்பட்டதா என்றால் இல்லை. பின்னிட்டு மேற்படி சி.டி-கள் இயக்கி பார்க்கப்பட்டதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் எதிரியிமிருந்து மேற்படி சி.டி-களை கைப்பற்றிய இடத்தில் கடைகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அருகே உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் தனி நபர்கள் யாரும்

சாட்சியமளிக்க முன்வரவில்லை. மேற்படி யாரை சாட்சியமளிக்க ஆய்வாளர் வேண்டினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி எதிரியின் வீட்டிற்கு சோதனைக்கு சென்ற பகுதி குறித்து தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எதிரியின் வீடு கூரை வீடா, ஓட்டு வீடா, டெரஸ் வீடா என்றால் ஞாபகம் இல்லை. எதிரியின் வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. காவலர்கள் வருவதை அறிந்து அனைவரும் சென்றுவிட்டார்கள். சோதனைக்கு வீட்டிற்கு வருவதை யார் தகவல் சொன்னார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் வீடு நாங்கள் சோதனைக்கு சென்றபோது திறந்துதான் இருந்தது. ஆனால் வீட்டிற்குள் யாரும் இல்லை. எதிரியின் வீடு காம்பவுண்டு வீடா, தனிப்பட்ட வீடா என்றால் வரிசையாக வீடு இருந்தது. எதிரியின் வீட்டில் எத்தனை ரூம்கள் இருந்தது எந்த ரூமில் இருந்து சி.டி-க்கள் மற்றும் அது தயாரித்த இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டது என்றால் வீட்டிற்குள் உள்ள முதல் அறையாகும். மேற்படி கைப்பற்றப்பட்ட இயந்திரம் எந்த நிறுவனத்தின் தயாரிப்பு என்று தெரியுமா என்றால் நினைவில்லை. எதிரியின் வீட்டில் இருந்து எந்த புதுப்படங்கள் கைப்பற்றப்பட்டது என்றால் பேருந்து நிலையத்தில் கைப்பற்றப்பட்ட படங்களின் சி.டி-க்களே கைப்பற்றப்பட்டது. மேற்படி எதிரியின் வீட்டில் 4650 புதுப்பட சி.டி-கள் கைப்பற்றப்பட்டது. எதிரியின் வீட்டில் 14.20 ல் இருந்து 15.40 மணி வரைக்கும் சோதனை செய்தோம். நாங்கள் சோதனை செய்தபோது எதிரி வீட்டிற்கு யாரும் வந்தார்களா என்றால் யாரும் வரவில்லை. எதிரி வீட்டை சோதனை செய்தவது சம்பந்தமாக பக்கத்தில் உள்ள தனிநபர் சாட்சிகளை சாட்சிகளாக இருக்க ஆய்வாளர் அழைத்தாரா என்றால் அழைத்தார் ஆனால் யாரும் முன்வரவில்லை. மேற்படி பக்கத்தில் உள்ள நபர்கள் குறித்து எனக்கு தெரியாது. எதிரியின் வீட்டில் கைப்பற்றப்பட்ட சி.டி-களும் இயக்கி பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எவ்வித ஒப்புத வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றப்பட்ட மகஜருக்கும் எதிரிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கைப்பற்றப்பட்ட சி.டி-களுக்கு காப்புரிமை உள்ளதா என்று சம்பந்தப்பட்ட பட

உரிமையாளரிடம் விசாரிக்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. கோவையில் உள்ள எங்கள் காவல் நிலையத்தின் அருகே வெங்கடேஷ் பேக்கரி உள்ளதா என்றால் எனக்கு நினைவில்லை. மேற்படி வெங்கடேசா பேக்கரியில் வேலை பார்க்கும் அசா 1 டமிருந்து புள்ளி விபர கணக்கிற்காக பொய்யான புகாரைப்பெற்ற எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் நிரையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Sd/E.Manikandan.
Judicial Magistrate No.I,
Pollachi.